**யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் - இரணைமடுக் கூறின் 2019**

யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் - இரணைமடுக் கூறின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2711–எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் உறுப்புரை, II ஆ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உள்ளக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வட மாகாண சபை அமுலாக்கல் முகவராக உள்ளது. இரணைமடுக் குளத்தின் தண்ணீர் தேக்கி வைத்திருக்கும் இயலளவை அதிகரிப்பதற்காக அதனை வலுப்படுத்திப் பெருப்பிப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 2,196.30 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 16.91 மில்லியனானதுடன் அதில் ரூபா 1,732.56 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 13.49 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 மே 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்யும் திகதி 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினத்தையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம்

ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| பிணக்குத் தீர்த்தல் சபை தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 32,362,896 தொகையான தாமதக் கட்டணங்கள் மற்றும் ரூபா 212,681 தொகையான நிதிக் கட்டணங்களிற்கான ஏற்பாடு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் குறைத்துக் காட்டப்பட்டமை | பிணக்குத் தீர்த்தல் சபை தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு வடக்கு மாகாண பிரதம செயலாளரால் மாகாண சபைகள் அமைச்சிற்கு குறைநிரப்பு ஒதுக்கீட்டிற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன் ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிதிக்கூற்றானது அதன் பங்குதாரர்களிற்கு உரிய அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்த வேண்டும். |

## 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் குறைபாட்டுப் பொறுப்புக்கூறல் காலப்பகுதி 2019 திசெம்பர் 31 அளவில் முடிவடைந்திருந்த போதிலும் மதியுரை சேவை உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்ததாரருக்கு செயலாற்றல் சான்றிதழ் வழங்கப்பட்டு இரண்டு வாரங்களினுள் மதியுரையாளரால் வேலை பூர்த்தியாக்கல் அறிக்கை சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>இதன் விளைவாக ரூபா 1,493,092 தொகையான மதியுரைச் சேவைகளிற்கான இறுதிக் கொடுப்பனவு மதியுரையாளரிற்குச் செலுத்தப்பட்டிருக்காததுடன் இது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரரிற்கான கொடுப்பனவுகள் தாமதமாகுதல். | மதியுரையாளர் தற்பொழுது வேலை பூர்த்தியாக்கல் அறிக்கையை சமர்ப்பித்திருந்ததுடன் நாங்கள் அதனை சரிபார்க்கின்றோம். அதன் பின்னர் மதியுரையாளருக்கான கொடுப்பனவு விடுவிக்கப்படும். | மதியுரையாளருடன் மேற்கொள்ளப்பட்ட சேவை உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை ஆவணப்படுத்தப்பட வேண்டும். மதியுரையாளரின் இறுதி பூர்த்தியாக்கல் அறிக்கையானது ஒப்பந்ததாரரால் குறைபாடில்லாமல் முறையாக உண்மையாக பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் இறுதிச் சான்றாக இருக்க வேண்டும். |

## 3.2 குறைப்பயன்பாட்டு வளங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| ரூபா 21.96 மில்லியன் கிரயத்தில் ஐந்து கொங்கிறீட் தளத்துடன் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு மின்சாரத்தை உற்பத்திசெய்யும் நோக்கில் சூரிய மின்கல மின்சார விநியோகத்திற்காக காணப்பட்ட போதிலும் 2 ஆண்டுகளிற்கு மேலாக கட்டிடம் பயன்பாடற்று | நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் இயலளவு பயன்படுத்தப்படாதமை | மூல ஒப்பந்தத்தில் கட்டிட ஏற்பாடு காணப்பட்டிருக்காததுடன் நில மட்டத்திற்கு சற்று மேலாக நிலத்தில் சூரிய மின்கல தொகுதிகளை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.<br><br>விவசாயிகளுக்கு களஞ்சியப்படுத்துவதற்கு கட்டிடடம் | உரிய நோக்கங்களிற்கு கட்டிடங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

காணப்பட்டது.

தேவைப்படுகின்றது. அதே நேரம் இக் கட்டிடங்கள் விவசாயிகளின் நலனிற்காகவும் செயற்திட்டம் நிலைத்திருப்பதற்காகவும் சீஈபீ இன் தேவைப்பாட்டின் பிரகாரம் "Net Plus" மின்சார இணைப்பை பெற்றுக்கொள்வதற்காக கூரையில் பொருத்தப்படும் சூரிய மின்கல முறைமையை அமைப்பதற்காக இக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

இச் செயற்திட்டத்தின் கீழான நிதிப் பற்றாக்குறை காரணமாக நாங்கள் முழுக் கட்டடத் தொழிற்பாட்டையும் பூர்த்தி செய்ய முடியாதிருந்ததுடன் கூரை வரை பூர்த்தி செய்யப்பட்டு சூரிய மின்கலத் தொகுதி நிறுவப்பட்டிருந்ததுடன் மின்சார உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு உதவுவதற்கு இக் கட்டிடத்தை பெற்று பூர்த்திசெய்வதற்கு ASMP செயற்திட்டத்துடன் நாங்கள் கலந்துரையாடியிருந்தோம்.

கொவிட் - 19 காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் ASMP செயற்திட்டத்தின் அங்கீகாரம் தொடர்பாக சில காலதாமதம் காணப்படுகின்றது.

## 3.3 முறைமை மற்றும் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| விவசாயிகள் பதிவேடொன்று பேணப்படாமல் மின்தூக்கி நிர்ப்பாசனம் (lift irrigation) ஊடாக நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக செயற்திட்டத்தின் மொத்த பயனாளிகளின் சனத்தொகையை சரியாக இனங்காண முடியாதிருந்தது. | செயற்திட்டத்தின் பயனாளிகளை இனங்காண முடியாதமை | மாவட்டச் செயலகத்தின் உதவியுடன் கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக உயர் நில விவசாயிகள் பதிவேட்டை தயாரித்து பேணுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். நெற்காணிப் பதிவேடுகளை நாளதுவரையாக்குதல் செயன்முறையில் உள்ளது. அது பூர்த்திசெய்யப்பட்டதும் உயர் நில பதிவேட்டு வேலை ஆரம்பிக்கப்படும். தற்போது இது விவசாயிகள் அமைப்பில் கிடைக்கக்கூடியதாகவுள்ள பட்டியலுடன் செயற்படுத்தப்படுகின்றது. | செயற்திட்டத்தின் பயனாளிகளை இனங்காண்பதற்கு பதிவேடு பேணப்பட வேண்டும். |